முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 13.11.2025

O.S No. 90/2022

வா.சா. 1 ராஜஜெயந்தி

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்களை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது அப்பா எனக்கு செட்டில்மென்ட் எழுதிகொடுத்தார் என்றால் சரி. அதில் நிபந்தனையை எனது அப்பா விதித்துள்ளார் என்றால் சரி. அவற்றில் 2,3 நிபந்தனைகள் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரி, எனது அக்காவை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரி. அவர் தவறிவிட்டார். எனது அப்பா தவறிவிட்டார் என்ற விவரத்தை பிராதிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரி. அவரது இறப்பு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

கொட்டாரம் கிராமம் ரீசர்வே எண். 68/3 ல் 25 ஏக்கர் 70 சென்டை 4 ஆக பிரித்ததில் எனக்கு 1 பகுதி எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரி. நான்கு பகுதியாக பிரிக்கப்பட்டபோது ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொண்டு பிரித்தார்கள் என்றால் சரியல்ல. அனைத்து நிலங்களும் ஒரே மட்டமாக இருந்தது. 4 ல் ஒரு பகுதியான 84 சென்ட்டில் தென்மேற்கு மூளையில் 5 சென்ட் சொத்தை எனக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் எழுதுப்பட்டது என்றால் சரி. 1 முதல் 4 பகுதிகளுக்கு தனியாக பாதை போடப்பட்டது என்றால் சரி.

எனது சொத்திற்கு கிழக்குப் பக்கம் பாதை உள்ளது என்றால் சரி. தெற்குப்பக்கம் பாக்கியதாஸ்- ற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சுரேஷ் ராஜனுக்கு கொடுக்கப்பட்டது.

வா.சா.ஆ,2 ஆவணத்தின் படி 3ம் பிரதிவாதியின் சொத்திற்கு வடக்குப் பக்கம் உள்ள பாதையை தேவ அன்பு மற்றும் வேறு நபர்கள் உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்றால் சரி. வழக்கு ஏ பட்டிகைச் சொத்தின் தெற்குப்பகுதியானது 3ம் பிரதியின் சொத்தை தொட்டு வராது என்றால் சரி. 3ம் பிரதிவாதியின் சொத்தினால் வழக்கு ஏ பட்டிகைச் சொத்திற்கு தொந்தரவு இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.2 ஆவணப்படி 3ம் பிரதி ராஜகோபால் என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரி. வா.சா.ஆ.7 ஆவணம் நான் தயார் செய்து தாக்கல் செய்தேன் என்றால் சரி. வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களுக்கும் வா.சா.ஆ 7 ற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பட்டாவானது ரீசர்வே எண், 68/3 சி க்கு எனது பெயரையும் சேர்த்து 14 பெயர்களின் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரி. கர ரசீதானது ரீசர்வே எண் 68/3 சி /1ற்கு 35.06 ஏர்ஸ் ல் பார்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

எனக்கு உரிமைப்பட்ட சொத்தை உட்பிரிவு செய்ய வருவாய் துறையில் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த மனுவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். என்னுடைய சொத்தை உட்பிரிவு செய்தால் சொத்தின் இடம் தெரியும் என்றால் சரி. வா.சா.ஆ.8 புகாரில் எனக்கும் 3ம் பிரதிக்கும் 8 வருடங்களாக பிரச்சனை இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. புகார் மீதான மன ரசீது ஒப்புகைச்சீட்டு ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதன்மீது எடுக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கை ஏதாவது தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

வழக்கறிவிப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரங்கள் இல்லை என்றாலும் பிராதின் நகல் இணைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 9

ஆவணம் செல்லுபடியாகத ஆவணம் என்றாலும் முறையான அறிவிப்பு கொடுக்காமல் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி. அதன் மேல் நாங்கள் தனிப்பட்ட உரிமை கோர முடியாது என்றாலும் மற்ற நபர்கள் போல் பாதையாக நாங்கள் பயன்படுத்திக் கொள்ளளலாம் என்றாலும் சரிதான்.வழக்கு பி பட்டிகைச் சொத்தில் சம்மந்தமாக பிரதிவாதிகள் அமைத்ததாக சாய்தளத்தை காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமணம் கோரி மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். 3 முதல் 5 பிரதிகள் கொடுத்ததாக சொல்லப்படும் தொந்தரவுகளுக்கு 1,2 பிரதிகளுக்கு எதுவும் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 3 முதல் 5 பிரதிகள் வழக்குச் சொத்தில் செய்யப்போகும் கட்டுமானங்களுக்கு 1 , 2 பிரதிகளிடம் அனுமதி பெற வேண்டும் என்றாலும் என்னிடம் அனுமதி கேட்க தேவையில்லை என்றாலும் எனக்குத் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் உரிய சட்ட நடவடிக்கைகளை பின்பற்றி யார் ஒருவருக்கு அனுமதி கொடுப்பார்கள் என்றால் சரி. என்னிடம் 4 சக்கர வாகனம் உள்ளதா என்றால் உள்ளது.

நான் ஏ பட்டிகைச் சொத்தில் வீடு வைத்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிறது. அப்போதே என்னிடம் கார் இருந்ததா என்றால் இருந்தது. அரசுக்கு சொந்தமான பாதை வழியாக நான் என்னுடைய காரில் சென்று வருகிறேன் என்றால் சரி. தற்போது பிரதிகள் அடைத்துவிட்டார்கள். எந்த தேதியில் அடைத்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. கடந்த 4 வருடங்களாக அடைத்துள்ளார்கள். உண்மையில் அடைத்து வைக்கவில்லை என்றாலும் அடைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி பட்டிகைச் சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

பி பட்டிகைச் சொத்தில் பஞ்சாயத்தால் கான்கிரீட் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்து வழியாக ஏ பட்டிகை வீட்டிற்கு செல்ல எந்த இடைஞ்சலும் இல்லை என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் மீதுள்ள விரோதத்திற்கு 1,2 பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பி சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் அபிவிருத்தி செய்வதற்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் எதாவது தொந்தரவு செய்திருந்தால் 2 ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்திருக்க வேண்டும் என்றாலும் 2ம் பிரதிவாதி உடனே நடவடிக்கை எடுத்துவிடுவார் . வழக்கே தேவையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தின் மீது புகார் மனு கொடுத்தற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனக்கு எந்த உரிமையும் இல்லலாததால் வா.சா.ஆ.8 ற்கு பிறகு காலம் தாழ்த்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிகளுக்கு எதிராக எந்த வழக்கு மூலமும் முகாந்திரமும் இல்லை என்றாலும் 1,2 பிரதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.